**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கும்மிடிப்பூண்டி**
**முன்னிலை திரு. R. செந்தில் குமார், M.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கும்மிடிப்பூண்டி**
**2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 01ம் தேதி திங்கட்க்கிழமை**
**குற்ற பல்வகை மனு எண். 303/2026**

ஹேமந்த், வ/18, த/பெ. சீனு

..........மனுதாரர் /எதிரி

**/எதிராக/**

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பாதிரிவேடு காவல் நிலையம்,
குற்ற எண்.99/2026

......எதிர் மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இந்த மனுவானது 22.05.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.வ.செ. ராஜா, திரு.எம். கார்த்திக், திரு.எம். மோகன், திரு.எ. முரளி அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் கேட்டறிந்து 01.06.2026 அன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. மனுதாரர்/ எதிரிக்கு பிணை வழங்ககோரி BNSS பிரிவு 480 ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.மனுதாரர்/ எதிரி மீது பாதிரிவேடு காவல் நிலைய குற்ற எண்.99/2026 ல் சட்ட பிரிவுகள் 126(2), 296(b), 115(1), 118(1), 351(3) of BNSன் கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டு மனுதாரரான எதிரி கடந்த 20.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 12 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி புலன் விசாரணையில் குறுக்கிடமாட்டார் எனவும், இவ்வழக்கில் மனுதாரருக்கு தக்க பிணையதாரர்கள் உள்ளார்கள் எனவும், நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனைக்கும் மனுதாரர் கட்டுப்படுவார் எனவும், ஆகவே, மனுதாரரை பிணையில் விடுவிக்கும்படி கூறப்பட்டது.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில், கடந்த 19.05.2026 அன்று புகார்தாரர் தனது வீட்டிற்கு செல்லும்போது எதிரி புகார்தாரரை வழிமறித்து அசிங்கமாக பேசியதாகவும் காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி கல்லால் அடித்து கல்லை

தூக்கிப்போட்டு கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும் அளித்த புகாரின் அடிப்படையில் எதிரியை கைது செய்ததாகவும், புகார்தாரர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கோட்டக்கரை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று அன்றைய தினமே வீடு திரும்விட்டார். மேலும் எதிரியிடமிருந்து TN18BZ7319 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor Plus Bike (Black color) என்ற வாகனம் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றபட்டுள்ளதாகவும் எதிரி மீது புலன் விசாரணை நிலுவையில் இருப்பதாலும், எதிரிக்கு பிணை வழங்கினால் இதே போன்று குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில்விட கடுமையான ஆட்சேபனை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:</u>

பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

<u>தீர்வு</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது பாதிரிவேடு காவல் நிலைய குற்ற எண்.99/2026 ல் சட்ட பிரிவுகள் 126(2), 296(b), 115(1), 118(1), 351(3) of BNSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கடந்த 20.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 12 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மேலும் எதிரி மீது முன் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்பதாலும், எதிரியை கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் / எதிரி தனக்காக இரு ஜாமீன்தாரர்களுடன் தலா ரூ.10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. மனுதாரர் பாதிரிவேடு காவல் நிலையம் ஆஜராகி வேலை நாட்களில் காலை 10.30 மணிக்கு 15 நாட்களுக்கு கையொப்பம் போடவேண்டும்.

3. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பின்பு குற்றச்செயலில் ஈடுபடக்கூடாது என்றும், புலனாய்வுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும், சாட்சியையோ புகார்தாரரையோ மிரட்டக் கூடாது என்றும், சாட்சிகளை கலைக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,**

இந்த **பிணை மனு அனுமதிக்கப்பட்டு,** மனுதாரர் / எதிரியை மேற்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணையில் விட அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 01.06.2026ம் தேதி திங்கட்க்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R.Senthil Kumar Digitally signed by R.Senthil Kumar
Date: 2026.06.01 17:11:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்மிடிப்பூண்டி.